செ.வெ.எண்-05 நாள்-05.01.2021

# அரியலூர் மாவட்டம்

## ஆண், பெண் குழந்தைகள் சமம் என்ற மனநிலையை பெற்றொர்களிடத்தில் ஏற்படுத்திட வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் வேண்டுகோள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட சமூக நலத்துறையின் சார்பில் பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் என்ற பெண் குழந்தைகள் பாதுகாப்பு குறித்து பணியாளர்களான விழிப்புணர்வு பயிற்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

இப்பயிற்சியில், சட்டப்பணிகள் ஆணைக்குழு சிவில் நீதிபதி **திருமதி.அல்லி** மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் **திரு.வீ.ஆர்.சீனிவாசன்** அவர்கள் முன்னிலை வகித்தனர்.

இப்பயிற்சியில், பெண் குழந்தைகள் பாதுகாக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மற்றும் சட்ட உதவிகள் குறித்தும், குழந்தை பாலின விகிதம் குறைவதால் ஏற்படும் பாதிப்புகள், குழந்தை பாலின விகிதம் (CSR), பிறப்பு பாலின விகிதம் (SRB) அதிகரிப்பதற்கான வழிமுறைகள் மற்றும் பெண்களுக்கான அரசு வழங்கும் மருத்துவ நலத்திட்டங்கள் குறித்தும், இத்திட்டத்தை அங்கன்வாடி பணியாளர்கள் மூலம் ஒருங்கிணைத்து செயல்படுத்துவது குறித்தும் பயிற்யாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

**இப்பயிற்சி வகுப்பை துவக்கி வைத்து, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

அரியலூர் மாவட்டத்தில் குறைந்து காணப்படும் பெண் குழந்தை விகிதத்தை அதிகரிக்கும் வகையிலும், கிராம அளவில் மக்கள் மனதில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் என்ற பெண் குழந்தைகள் பாதுகாப்பு குறித்து சுகாதாரம், கல்வித்துறை, சமூக நலத்துறை, மகளிர் திட்டம் ஆகிய துறைகளின் பணியாளர்கள் பயிற்சியாளர்களாக தேர்வு செய்து, இன்று ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சியாளர்கள் அனைவரும் கிராம, கிராமமாக சென்று பொதுமக்களுக்கு பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளை கற்பிப்போம் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தி, கர்ப்பிணி பெண்களை ஆரம்பகாலம் முதல் பரிசோதனை செய்து, கருகலைப்பை முற்றிலுமாக தடுத்திடும் வகையில் கர்ப்பிணித்தாய்மார்களுக்கு அறிவுரை வழங்கி கண்காணித்திட வேண்டும். கருவில் இருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்பது தெரிவிப்பது சட்டப்படி குற்றமாகும். மேலும் ஸ்கேன் மையங்களை கண்காணித்து, கருவில் வளரும் குழந்தை பாலினம் பரிசோதனைகள் மேற்கொள்ளும் ஸ்கேன் மையங்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும், கிராமங்களில் பெற்றோர்களிடையே ஆண், பெண் குழந்தைகள் சமம் என்ற விழிப்புணர்வை பணியாளர்கள் ஏற்படுத்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

பின்னர், கருவில் வளரும் சிசுவின்பாலினத்தை எக்காரணம் கொண்டும் கண்டறியவோ, கருக்கொலை செய்யவோ முயல மாட்டேன் என்ற விழிப்புணர்வு உறுதிமொழி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் பணியாளர்கள் அனைவரும் எடுத்துக்கொண்டனர். அதனைத்தொடர்ந்து, பெண் குழந்தைகளை பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் என்ற விழிப்புணர்வு வாசகத்தை அஞ்சல் அட்டைகளில் அச்சிட ரூ.2 இலட்சத்திற்கான காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்கள்.

இப்பயிற்சியில், மாவட்ட சமூக நல அலுவலர் (பொ) ந.சாவித்ரி, கோட்டாட்சியர்கள் ஜோதி (அரியலூர்), பூங்கோதை (உடையார்பாளையம்), துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) வீ.சி.ஹேமசந்த்காந்தி, மற்றும் செவிலியர்கள், பணியாளர்கள், சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**